**செய்தி வெளியீடு எண்: 071** **நாள்: 28.01.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் இன்று (28.1.2019) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில், விரிவாக்கம் செய்யப்பட்ட செயிண்ட் கோபைன் இந்தியா தொழிற்சாலையை துவக்கி வைத்து ஆற்றிய உரை**

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இன்று ஸ்ரீபெரும்புதூர் அருகே செயிண்ட் கோபைன்
நிறுவனத்தின் மூன்றாவது மிதவை கண்ணாடி ஆலையையும்,
இரண்டு தொழிற்சாலைகளையும் தொடங்கி வைப்பதில்
நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டுள்ள
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்
**திரு. எம்.சி.சம்பத் அவர்களே!**

மாண்புமிகு அமைச்சர் **திரு.பென்ஜமின் அவர்களே!**
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கிற
நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய
சகோதரர் **திரு.வேணுகோபால் அவர்களே!**
நாடாளுமன்ற உறுப்பினர் **திருமதி.மரகதம் குமரவேல் அவர்களே!**
பிரான்ஸ் கவுன்சல் ஜெனரல் **திருமதி கேத்தரின் சுவார்டு அவர்களே!**

தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்
**திரு. கு. ஞானதேசிகன் அவர்களே!**

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற
**திரு. மதன்மிஸ்ரா** அவர்களே!

செயிண்ட் கோபைன் குழுமத்தின் தலைவர் மற்றும்
தலைமை நிர்வாக அதிகாரி **திரு.ஆண்ட்ரோ சேலண்டர்** அவர்களே!

செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தலைவர்
**திரு. ஆனந்த மகாஜன் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற முன்னாள் அமைச்சர்கள்
சகோதரர் **திரு.சோமசுந்தரம் அவர்களே!**
**திரு.மூர்த்தி அவர்களே!**

**திருமதி மைதிலி திருநாவுக்கரசு அவர்களே!**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகோதரர்
**திரு.சிட்லபாக்கம் ராஜேந்திரன் அவர்களே!**
**திரு. காஞ்சி பன்னீர்செல்வம் அவர்களே!**

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்
**சகோதரர் திரு.வாலாஜாபாத் கணேசன் அவர்களே!**
**சகோதரர் திரு.மணிமாறன் அவர்களே!**

**திரு. திருக்கழுகுன்றம் ஆறுமுகம் அவர்களே!**

செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்
**திரு. பி.சந்தானம் அவர்களே!**

பிரெஞ்ச் நாட்டு தூதரக அதிகாரிகளே!
செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் நிர்வாகிகளே!

மற்றும் பெருந்திரளாக கூடியிருக்கின்ற, நிறுவனத்தில் பணிபுரிகின்ற பணியாளர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தொழிலாளர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த
வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு,

தொழில்நுட்ப அனுபவத்துடன் கூடிய மனித வளம்,
தடையில்லா மின்சாரம், சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள்,
சிறப்பான சட்ட ஒழுங்கு பராமரிப்பு,
வெளிப்படையான மற்றும் எளிமையான அணுகுமுறை
போன்ற தொழில் தொடங்கத் தேவையான
அனைத்து சாதகமான சூழ்நிலைகள் மாண்புமிகு அம்மாவின்
அரசால் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உற்பத்தியை பெருக்கி, நாட்டின் பொருளாதாரத்தை
மேம்படுத்துவதிலும், தமிழ்நாட்டை முதலீட்டுக்கு
உகந்த தேர்விடமாக உருவாக்கவும், மாண்புமிகு அம்மாவினுடைய

அரசு ஆக்கபூர்வமான கொள்கைகளை வெளியிடுதல்,
திட்டமிடுதல் மற்றும் அத்திட்டங்களை
சீரிய முறையில் செயல்படுத்துதல் போன்ற
நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதற்காக, தொலைநோக்குத் திட்டம் 2023,
தமிழ்நாடு தொழில் கொள்கை 2014, மோட்டார் வாகனங்கள்
மற்றும் உதிரி பாகங்கள் கொள்கை 2014,
உயிரி தொழில் நுட்பக் கொள்கை 2014,
தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கை 2018
மற்றும் தமிழ்நாடு வானூர்தி மற்றும்
பாதுகாப்பு தொழில் கொள்கை 2019 ஆகியவை
தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டன.

திருத்தப்பட்ட தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை
விரைவில் வெளியிடப்படும்.

முதலீடு செய்ய வரும் நிறுவனங்களுக்கு,
30 நாட்களுக்குள் ஒற்றைச்சாளர முறையில்
வேண்டிய அனுமதிகள் வழங்கப்படுவதை 2018ஆம்
ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல்
சட்டம் உறுதி செய்கிறது.
30 நாட்களுக்கு மேலாகும் பட்சத்தில்,
தானாகவே அனுமதி வழங்கப்பட்டதாக
கருதப்படும் ஷரத்துகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையில்
புதிய தொழில் தொடங்க **தமிழ்நாடு புத்தொழில்
மற்றும் புத்தாக்கக் கொள்கை** சமீபத்தில் மாண்புமிகு
அம்மாவின் அரசால் வெளியிடப்பட்டுள்ளது.
தொழில்நுட்பம் வழியே புத்தாக்கத்திற்கு
உகந்த சூழலை உருவாக்குவதே இக்கொள்கையின்
முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டில் துடிப்பான
புத்தொழில் சூழலை உருவாக்குவதன் மூலம் 2023க்குள்
10 உலகளாவிய உயர் வளர்ச்சி புத்தொழில்கள் உட்பட,
குறைந்தபட்சம் 5,000 புத்தொழில்கள்,
உருவாக்கப்பட்டு, வேலைவாய்ப்பு மற்றும்
பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும்
என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே
இந்த கொள்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதை
இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் இரண்டாவது பெரிய
பொருளாதார மாநிலமாகவும், தொழில் மயமாக்கப்பட்ட
மாநிலங்களில் ஒரு முன்னணி மாநிலமாகவும்
தமிழ்நாடு திகழ்கிறது. சமீபத்தில் நாடாளுமன்றத்தில்
அன்னிய நேரடி முதலீடு குறித்து ரிசர்வ் வங்கி
சமர்ப்பித்த அறிக்கையில் தமிழ்நாட்டில்
2017–18 ஆம் ஆண்டில் கூடுதலாக 56 சதவீதம்
முதலீடு பெறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் முதலீட்டிற்கு சிறந்த மாநிலமாக
சென்ற ஆண்டு ஆறாம் இடத்தில் இருந்து,
2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இரண்டாம் இடத்திற்கு
முன்னேறியுள்ளது என தேசிய பயன்பாட்டு பொருளாதார
ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பீடுநடை
போடுகிறது என்பதை இந்த அறிக்கைகள் உறுதி செய்கின்றன.

தொழில் வளர்ச்சியினை மேலும் செம்மைப்படுத்தும்
வகையிலும், அதிக தொழில் முதலீட்டினை ஈர்க்கும்
வண்ணமும், தொழில் மயமாக்குதல்,
வேலைவாய்ப்பை அதிகரித்தல்,
மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்,
மாநிலம் முழுவதுமான சீரான வளர்ச்சி
மற்றும் சுற்றுச் சூழலுடன் இணைந்த
நிலைத்த நீண்ட கால முன்னேற்றம்
ஆகியவற்றினை அடைவதற்கு மாநிலத்தில்
முதல் முறையாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015
ஆம் ஆண்டு செப்டம்பர் 9 மற்றும் 10 ஆம்
தேதிகளில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
சென்னையில் வெற்றிகரமாக நடத்தனார்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து சென்ற வாரம் மீண்டும்
உலக முதலீட்டாளர்கள் மாநாடு மாண்புமிகு அம்மாவின்
அரசால் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது என்பதை
இங்கே பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இதன் காரணமாக, இன்றைய தினம் 3 லட்சத்து 431 கோடி
ரூபாய்க்கு தொழில் முதலீடுகளும்,
சுமார் 10 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு மேல்

வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

செயிண்ட் கோபைன் நிறுவனம் 1665–ஆம் ஆண்டு
பிரான்ஸ் நாட்டில் தொடங்கப்பட்டு,
மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக
கண்ணாடி தொழில்நுட்பத்தில் தொடர்ந்து உலகளவில்
ஓர் சிறந்த முன்னோடி நிறுவனமாக விளங்குகிறது.

"The Customer is King" அதாவது,
"வாடிக்கையாளரே மன்னர்" என்ற கூற்று
செயிண்ட் கோபைன் நிறுவனத்திற்கு
மிகப் பொருத்தமாக உள்ளது.

பிரான்ஸ் நாட்டின் மன்னர் 14வது லூயிஸ்
அவர்கள்தான் இந்த நிறுவனத்தின்
முதல் வாடிக்கையாளர் என்றும்,
அவர் தனது அரண்மனைக்காக
கண்ணாடி வாங்குவதற்காக இந்த நிறுவனத்தை அணுகினார்
என்றும் அறிகிறேன்.

மன்னர் முதல் பொதுமக்கள் வரை அனைவரது
விருப்பத்தினை பூர்த்தி செய்யும் வகையில்
விதவிதமான கண்ணாடிகளை உங்கள் நிறுவனம்
தயாரித்து வருகிறது என்பதை இங்கே
குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

செயிண்ட் கோபைன் நிறுவனம் தமிழ்நாட்டுடன்
இதுவரை நான்கு ஒப்பந்தங்களில் பல்வேறு கட்டங்களில்
கையொப்பமிட்டு, அதன்மூலம் இதுவரை
3,400 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டில் தனது மூன்றாவது
மிதவை கண்ணாடி தொழிற்சாலையை
800 கோடி ரூபாய் முதலீட்டில்
5 ஆண்டுகளில் முடிக்க திட்டமிட்டு,
மாண்புமிகு அம்மாவின் அரசின் ஒத்துழைப்புடன்
மூன்றாண்டு காலத்திற்குள்ளேயே
அந்த தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டுள்ளது
என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.
இதனை நான் இன்று துவக்கி வைத்துள்ளேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 17.2.2006 அன்று
ஸ்ரீபெரும்புதூரில் செயிண்ட் கோபைன் நிறுவனத்தின்
2வது மிதவை கண்ணாடி ஆலையை
நாட்டிற்கு அர்ப்பணித்தார்கள்.

அப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள்
இந்த வளாகம் ஒரு உலகத் தரம் வாய்ந்த
கண்ணாடி உற்பத்தி செய்யும் வளாகமாக உருவெடுக்கும்
என்று கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்
அன்று தீர்க்க தரிசனமாக கூறியதுபோல்,
இந்த வளாகத்தில் மேலும் பல தொழிற்சாலை அலகுகள்
அமைக்கப்பட்டு வருவதை அறிந்து
நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையை ஏற்று
இந்த நிறுவனம் இயற்கை வளம் காத்தல்,
மழைநீர் சேகரிப்பு ஆகிய திட்டங்களை
செயல்படுத்தியதை மாண்புமிகு அம்மா அவர்கள்
அந்த நிகழ்ச்சியில் பாராட்டினார்கள்.

மேலும், செயிண்ட் கோபைன் நிறுவனம்
வளர்ச்சியடைய பலவித ஆலோசனைகளையும்
அந்நிகழ்ச்சியில் வழங்கினார்கள் என்பது,
நமது அம்மா அவர்கள் தமிழ்நாட்டின்
தொழில் வளர்ச்சியில் கொண்டுள்ள அக்கறையை
தெளிவாக காட்டுகின்றது.

சென்னை தரமணியில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில்,
சுமார் 110 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும்
வகையில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் சதுரஅடி பரப்பில்
அமைந்துள்ள செயிண்ட் கோபைன்
ஆராய்ச்சி (இந்தியா) மையத்தை மாண்புமிகு அம்மா அவர்கள்
29.1.2016 அன்று துவக்கி வைத்தார் என்பதை
இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களும்,
தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும்
அளித்த ஊக்கத்தினால் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள
இந்த நிறுவனத்தின் கண்ணாடி வளாகம்
ஆண்டுக்கு ஆண்டு விரிவடைந்து கொண்டே இருக்கிறது.

மேலும், இந்த நிறுவனம் தனது பன்னாட்டு முதலீடுகளில்
அதிக அளவில்  தமிழ்நாட்டில் தான் செய்துள்ளது என்பதை
அறிவதில் நான் மிக்க மகிழ்ச்சி  அடைகிறேன்.

சென்ற வாரம் நடைபெற்ற  உலக முதலீட்டாளர் மாநாட்டில்,
மேலும் 720 கோடி ரூபாயினை தமிழ்நாட்டில்
முதலீடு செய்யும் ஒப்பந்தத்தில் செயிண்ட் கோபைன் நிறுவனம்
கையொப்பமிட்டுள்ளது என்பதை அறிவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின்
மழைநீர் சேகரிப்பு திட்டத்தை எவ்வாறு
இந்நிறுவனம் செயல்படுத்தியதோ,
அதே போன்று, தற்போது மாண்புமிகு அம்மாவின் அரசு
1.1.2019 முதல் அறிவித்திருக்கிற
பிளாஸ்டிக் தடை அறிவிப்பினையும்
முழுமையாக செயல்படுத்திட வேண்டும்
என்று அன்போடு இந்தத் தருணத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிறுவனம் அதிக அளவில் தமிழ்நாட்டில்
முதலீடுகளை செய்யுமாறு  அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு
உங்கள் நிறுவனத்திற்கு அனைத்து ஒத்துழைப்பும்
நல்கும் என்று கூறி, இந்த நிறுவனம்
தனது வெற்றிப் பயணத்தை தொடர
எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த
அனைத்து நல்ல உள்ளங்களுக்கும்
எனது மனமார்ந்த, உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!
வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

* * * * *